

அண்ணல் அம்பேத்கர் அவர்களை அவமரியாதை செய்திடும் வகையில் பேசிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்தும் – அவர் பதவி விலக வேண்டுமெனக் கோரியும், புதுடெல்லியில் நேற்று (20.12.2024) 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளின் எம்.பி.க்கள், நாடாளுமன்ற வளாகத்தில் 3வது நாளாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மல்லிகார்ஜுன கார்கே, பிரியங்கா காந்தி, கனிமொழி கருணாநிதி உள்ளிட்டோர் படத்தில் உள்ளனர்.

### தரச் சோதனையில் தேர்வாகாத நிறுவனங்களுக்கு

# ரூ.1000 கோடி ரேஷன் பொருள் வாங்க ஆணை என்பது உண்மைக்குப் புறம்பானது!

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குனர் அறிக்கை!

சென்னை, டிச.21

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் தரமான பருப்பு மற்றும் பாமாயில் வழங்கும் நிறுவனங்களுக்கே கொள்முதல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

அண்மையில் வெளியான செய்தியில் குறிப்பிட்டிருப்பது போன்று தர சோதனையில் தேர்வாகாத நிறுவனங்களுக்கு கொள்முதல் ஆணை ஏதும் வழங்கப்படவில்லை என தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலா ண்மை இயக்குனர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து விவரம் வருமாறு :-

அண்மையில் வெளியான செய்தியில் தர சோதனையில் தேர்வாகாத நிறுவனங்களுக்கு ரூ.1000 கோடி ரேஷன் பொருள் வாங்க ஆணை என்று தலைப்பிட்டு வந்துள்ள செய்தி முற்றிலும் தவறானதாகும்.

தமிழ்நாட்டில் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான பருப்பு மற்றும் பாமாயில், தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 படி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டு உரிய நடைமுறைகளைப் பின்பற்றி கொள்முதல் செய்யப்படுகின்றன. நாளிதழ்களில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப ஆவணங்கள் தலைமை அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள 5 அலுவலர்களைக் கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக்குழுவால் முழுமையாக ஆய்வு செய்யப்படுகின்றன. இவற்றில் தேர்ச்சி பெற்ற தகுதியுள்ள (Technically Qualified) ஒப்பந்தப்புள்ளிகளின் பட்டியலினை இக்குழு பரிந்துரைக்கிறது.

அதன் பின்னர் விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டுத் தகுதியான நிறுவனங்களுடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் குழுமத் துணைக்குழு விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை நடத்தி அதன் பரிந்துரையின் அடிப்படையில் குழுமக்குழுவின் ஒப்புதல் பெற்று குறைந்த விலைக்கு விநியோகிக்க ஒப்புக்கொண்ட நிறுவனங்களுக்குப் பாமாயில் மற்றும் துவரம் பருப்பு கொள்முதலுக்கான ஆணைகள் வழங்கப்படுகின்றன.

ஜனவரி 2025 முதல் மார்ச் 2025 வரையிலான மூன்று மாதங்களுக்குத் தேவையான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் கொள்முதல் செய்வதற்குக் கடந்த 21.11.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு அதற்கான பருப்பு மற்றும் பாமாயில் மாதிரிகள் ஒப்படைப்பு செய்வதற்கு 09.12.2024 இறுதி நாளாக நிர்ணயிக்கப்பட்டது. ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்கும் ஒவ்வொரு நிறுவனமும் ஒப்பந்தப்புள்ளி சரத்து 14(9) படி இரண்டு மாதிரிகளைச் சமர்ப்பிக்க வேண்டும். இதில், 18 நிறுவனங்களிடமிருந்து 30 பருப்பு மாதிரிகளும் 9 நிறுவனங்களிடமிருந்து 9 பாமாயில் மாதிரிகளும் தலைமை அலுவலகத்தில் பெறப்பட்டன. பருப்பு மாதிரி சமர்ப்பித்த நிறுவனங்களில் ஒன்றும் பாமாயில் மாதிரி சமர்ப்பித்த நிறுவனங்களில் ஒன்றும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவில்லை.

ஒவ்வொரு நிறுவனமும் சமர்ப்பித்த இரு மாதிரிகளில் ஒன்றினைப் பகுப்பாய்விற்காக சோதனை மற்றும் அளவுத்திருத்த ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தால் (NABL) அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகம் ஒன்றிற்கு அனுப்பி வைப்பதும் ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்றவர்களின் இரண்டாவது மாதிரியினை மூன்று மாத காலத்திற்குப் பாதுகாப்பாக வைத்திருப்பதென்பதும் நடைமுறையாகும்.

இவற்றில் முதல் மாதிரி பகுப்பாய்வில் தேர்ச்சி பெறாத நேர்வுகளில், இரண்டாவது மாதிரியினை ஆய்வகத்திற்குப் பகுப்பாய்விற்கு அனுப்பி அதில் கிடைக்கும் முடிவினையும் வைத்துப் பரிசீலனை செய்து இரண்டாவது மாதிரியிலும் தேர்ச்சி பெறாத நிறுவனத்தின் விலைப்புள்ளி திறக்கப்படமாட்டாது என்பதும் வழக்கத்திலுள்ள நடைமுறையாகும்.

09.12.2024 அன்று, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யாத நிறுவனங்களைத் தவிர்த்து 17 நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட பருப்பு வகை மாதிரிகள் மாதிரி எண் (Coding Number) குறிப்பிட்டு பகுப்பாய்விற்காக கிண்டியில் உள்ள NABLஆல் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகத்திற்கும் அதே நாளில் 8 நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட பாமாயில் மாதிரிகள் மாதிரி எண் (Coding Number) குறிப்பிட்டு திருமழிசையில் உள்ள NABL ஆல் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

10.12.2024 அன்று பெறப்பட்ட பருப்பு மாதிரிகளின் பகுப்பாய்வு அறிக்கையில், பகுப்பாய்விற்காக அனுப்பிய 30 பருப்பு மாதிரிகளில், 24 மாதிரிகள் நிர்ணயிக்கப்பட்ட தரத்துடன் இருந்ததாகவும் 6 மாதிரிகளில் மட்டும் சேதமடைந்த மற்றும் உடைந்த பருப்புகள் நிர்ணயிக்கப்பட்ட அளவைவிடக் கூடுதலாக இருந்ததால் அவை உரிய தரத்தில் இல்லை எனவும் ஆய்வு முடிவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும் மேற்கண்ட 6 மாதிரிகளின் தர ஆய்வு விவரங்கள் இந்திய உணவுப்பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI) மற்றும் அக்மார்க் (AGMARK) நிர்ணயித்த வரம்பிற்குள் இருந்தன. ஆதலால் 6 நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டாவது மாதிரிகள் மீண்டும் பகுப்பாய்விற்காக அனுப்பப்பட்டன. தொழில் நுட்ப ஒப்பந்த ஆய்வில் குறிப்பிட்டுள்ள படி முதலாவது மாதிரி உரிய தர நிபந்தனையினைப் பூர்த்தி செய்யவில்லையெனில், சிறிய அளவில் திரிபுகளிருப்பின் அதன் இரண்டாவது மாதிரியைப் பரிசீலித்து முடிவினை அறிவிப்பதென்பது வழக்கத்திலுள்ள நடைமுறையாகும். திரும்ப அனுப்பப்பட்ட ஆறு மாதிரிகளும் தர ஆய்வில் தேர்ச்சி பெற்றிருந்ததாக ஆய்வக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தர ஆய்வு அறிக்கை மற்றும் ஒப்பந்ததாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டதன் அடிப்படையில் விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டு அதனடிப்படையில் விலைக்குறைப்பிற்கான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. அதில் பருப்பில் குறைவான விலைப்புள்ளி அளித்த 4 நிறுவனங்களுக்கு கொள்முதல் ஆணைகள் வழங்கப்பட்டன. இவ்வாறு கொள்முதல் ஆணை வழங்கப்பட்ட நான்கு நிறுவனங்களின் பருப்பு மாதிரிகள் முதல் பகுப்பாய்விலேயே தரமானவை என சான்று பெறப்பட்டவையாகும்.

இந்நிறுவனங்களின் பருப்புகள் தரமற்றவை என நிராகரிக்கப்பட்டவையல்ல. இந்நிறுவனங்கள் அனைத்துமே கடந்த காலங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குத் துவரம் பருப்பு வழங்கிய நிறுவனங்களாகும். மேலும் முதல் மாதிரியில் தரம் குறைந்ததாக அறிவிக்கப்பட்ட நிறுவனங்கள் அளித்த விலைப்புள்ளிகளிலும் இந்த நான்கு நிறுவனங்கள் கொடுத்த விலைப்புள்ளியை விட அதிக விலைக் குறிப்பிடப்பட்டிருந்தன.

பாமாயிலுக்கும் இதே நடைமுறையில் தகுதி பெற்ற எட்டு நிறுவனங்களும் தேர்ந்தோர் பட்டியலில் தேர்வு செய்யப்பட்டு (Technically Qualified) அவற்றுடன் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை நடத்தி விலையினைக் குறைத்து வழங்கிய நிறுவனங்களுக்குக் கொள்முதல் ஆணைகள் வழங்கப்பட்டன.

பாமாயில் கொள்முதல் ஆணை பெற்ற 4 நிறுவனங்களுமே கடந்த காலங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு பாமாயில் வழங்கி வரும் நிறுவனங்களாகும்.

எனவே, மூன்று நிறுவனங்களின் பாமாயில் மாதிரிகள் தரமற்றவை என்று நிராகரிக்கப்பட்டதாகத் தெரிவித்திருப்பதும் பருப்பு கொள்முதல் ஆணை வழங்கப்பட்ட நான்கு நிறுவனங்களில் இரு நிறுவனங்களின் மாதிரிகள் முதலில் நடந்த தர பரிசோதனையில் தேர்வாகவில்லை என்பதும் சட்டத்திற்கு விரோதமாக அவற்றுக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பதும் முற்றிலும் தவறானதாகும். தர சோதனையில் தேர்வாகாத நிறுவனங்களுக்கு ரூ.1000 கோடி ரேஷன் பொருள் வாங்க ஆணை என்று தலைப்பிட்டிருப்பதும் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### ஒன்றிய அமைச்சர் அமித்ஷா பதவி விலக வலியுறுத்தி போராட்டம்!

# நாடாளுமன்றம் எதிரே "இந்தியா" கூட்டணிக் கட்சிகள் 3வது நாளாக ஆர்ப்பாட்டம்!

## காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட "இந்தியா" கூட்டணி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்!

புதுடெல்லி, டிச. 21-

அண்ணல் அம்பேத்கரை அவமதித்த உள்துறை அமைச்சர் அமித்ஷா பதவி விலக வலியுறுத்தி 'இந்தியா' கூட்டணி எம்.பி.க்கள் மூன்றாவது நாளாக டெல்லியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அமித்ஷாவின் வாகனத்தை முற்றுகையிட்ட எம்.பி.க்கள் அவருக்கு எதிராக முழக்கங்களை எழுப்பியதால் பரபரப்பு நிலவியது.

புரட்சியாளர், சட்ட மாமேதை அம்பேத்கரை அவமதித்து பேசிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, பதவி விலக வலியுறுத்தி, நாடாளுமன்ற வளாகத்தில் கடந்த 2 நாட்களாக எதிர்க்கட்சிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். 'இந்தியா' கூட்டணி கட்சிகளின் தொடர் போராட்டத்தால், நெருக்கடிக்கு உள்ளான ஒன்றிய பா.ஜ.க. அரசு, நாடாளுமன்ற நுழைவு வாயில் முன்பு போராட்டம் நடத்தக்கூடாது என்று மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா திடீர் உத்தரவிட்டுள்ளார். இந்நிலையில், தங்கள் கோரிக்கைகளில் உறுதியாக உள்ள, காங்கிரஸ், திமுக உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் எம்.பிக்கள், நாடாளுமன்றம் எதிரே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தங்கள் கைகளில் அண்ணல் அம்பேத்கரின் புகைப்பட பதாகைகளை கையில் ஏந்தியபடி ஊர்வலமாக சென்றனர். அப்போது, இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கிய சட்ட மாமேதை அம்பேத்கரை அவமதித்த, அமித்ஷா பதவி விலகி மன்னிப்பு கேட்க வேண்டும் என்று முழக்கமிட்டனர். மேலும், அமித்ஷாவை பாதுகாக்கும் பிரதமர் மோடிக்கும் இந்தியா கூட்டணி எம்.பிக்கள் கண்டனம் தெரிவித்தனர்.

### உயர்கல்வியில் தமிழ்நாடு முதலிடம் என்பதை சீர்குலைக்க முயற்சிக்கிறார்!

# தமிழ்நாட்டில் அரசியல் செய்வதை ஆளுநர் நிறுத்த வேண்டும்!

## புதுக்கோட்டையில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் பேட்டி!

புதுக்கோட்டை,டிச.21-

உயர் கல்வித் துறையில் இந்தியாவிலேயே முதல் மாநிலம் தமிழ்நாடு என்ற நிலையை எட்டியுள்ளோம். இதை சீர்குலைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் ஆளுநர் தொடர்ந்து உயர்கல்வி துறையின் பணியில் அரசின் பணியில் குறுக்கிட்டு இடர்பாடு உருவாக்க வேண்டும் என்பதற்காக கருத்து தெரிவித்து வருகிறார் என புதுக்கோட்டையில் தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி செழியன் பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

புதுக்கோட்டையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகை தந்த தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி செழியன் புதுக்கோட்டை ரோஜா இல்லம் என்ற விருந்தினர் மாளிகையில் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறுகையில்,

பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தரை நியமிக்க கூடிய தேடுதல் குழுவில் மூன்று நபர்களை முறையாக சரியாக அரசின் விதிப்படியும் பல்கலைக்கழகத்தின் விதிப்படியுப் தான் நியமித்தோம்.

**ஆளுநர் பெறுப்பிற்கு அழகல்ல!**

தன்னுடைய எல்லை என்ன எதில் தலையிட வேண்டும் எதில் தலையிடக்கூடாது என்ற நிலை தெரியாத ஆளுநர் அதை கண்டித்து இருப்பதும், யுஜிசி தேர்வு செய்யக்கூடிய உறுப்பினர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறி நான்காவது உறுப்பினரை எங்கள் தலையில் சுமத்தி உள்ளது ஆளுநர் பொறுப்புக்கு அழகல்ல.

இதுவரை தமிழ்நாடு முதலமைச்சர் மாநில உரிமைகளை கட்டி காப்பதில் ஒன்றிய அரசோடு பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் ஒன்றுபட்டு இந்தியாவை உருவாக்கி பல்வேறு மாநிலங்களுக்கு குரல் கொடுத்து வருகிறார்.

உயர்கல்வியை பொருத்த வரை பல்கலைக்கழகங்களுடைய செயல்பாடு தமிழ்நாடு அரசு விரும்பி பல்கலைக்கழக பேராசிரியர்கள் மாணவர்கள் நலன் காப்பதில் அக்கறையுடன் முதலமைச்சர் செயல்படுகிறார்.

**தமிழ்நாடு முதலிடம்!**

திமுக அரசு அமையும் போதெல்லாம் உயர் கல்வித் துறையில் அக்கறை காட்டிய காரணத்தினால் தான் முத்தமிழறிஞர் கலைஞர் காலத்திலிருந்து இன்று வரை உயர் கல்வித் துறையில் இந்தியாவிலேயே முதல் மாநிலம் தமிழ்நாடு என்ற நிலையை எட்டியுள்ளோம். இதை சீர்குலைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் ஆளுநர் தொடர்ந்து உயர்கல்வி துறையின் பணியில் அரசின் பணியில் குறுக்கிட்டு இடர்பாடு உருவாக்க வேண்டும் என்பதற்காக கருத்து தெரிவித்து வருகிறார். அதனால்தான் ஆளுநர் அறிக்கை மறுப்பு தெரிவித்து நேற்றைய தினம் ஆளுநர், ஆளுநர் பணியை பார்க்க வேண்டும் அண்ணாமலை பணியை பார்க்க வேண்டாம் என்று கருத்து தெரிவித்தோம்.

தமிழ்நாடு அரசை பொருத்தவரை ஆளுநரின் குறுக்கீடுகளை அவ்வப்போது அறிக்கையின் மூலமாக நாங்கள் அனுப்புகின்ற கோப்புகளின் மூலமாகவும் நிரூபித்து வருகிறோம். இதன் பிறகு ஆளுநர் தன் நிலையை தொடர்ந்தால் தமிழ்நாடு முதலமைச்சருடன் கலந்து பேசி தக்க நடவடிக்கை எடுக்கப்படும் சட்டரீதியான அவரது செயல்பாடுகளை வரையறுக்க வேண்டிய கட்டம் தமிழ்நாடு அரசுக்கு வரும் அந்த கட்டத்தை அவர் எட்டாமல் இருப்பது அவர் பதவிக்கு அழகு.

தமிழ்நாட்டை திருச்சி கோவை சென்னை மதுரை என நான்கு மண்டலங்களாக பிரித்து அனைத்து நிலையிலான துறை தலைவர்கள் பேராசிரியர்கள் முதல்வர்கள் மற்றும் பல்கலைக்கழகத்துடைய சிறப்பு கல்வி வல்லுனர்கள் பொறியியல் கல்லூரியுடைய சிறப்பு வல்லுநர்கள் பேராசிரியர்கள் நான் டீச்சிங் ஸ்டாப் பெற்றோர்கள் விடுதி மாணவர்கள் 7.5% படிக்கக்கூடிய மாணவர்கள் நான் முதல்வன் திட்டத்தில் படிக்கக்கூடிய மாணவர்கள் புதுமைப்பெண் திட்டத்தில் படிக்கக்கூடிய மாணவர்கள் மாற்றுத்திறனாளி மாணவர்கள் தமிழ் புதல்வன் மாணவர்கள் என ஒவ்வொரு பிரிவாக நான் முழுவதும் உயர்கல்வி துறை செயலாளர் ஆறு ஐஏஎஸ் அதிகாரிகளோடு நானே உடனிருந்து மாநிலம் முழுவதும் கோரிக்கைகளை பெற்று வந்திருக்கின்றோம். அந்த அடிப்படையில் புதிய கல்வி திட்டங்கள் சேர்க்கப்பட வேண்டும் பயனற்ற கல்வி திட்டங்கள் நீக்கப்பட வேண்டும் வேலை வாய்ப்பு கூறிய புதிய பாட முறைகள் புகுத்தப்பட வேண்டும் என்பது எல்லாம் நாங்கள் ஆய்வு செய்யும் பொழுது கண்டறிந்துள்ளோம் அதையெல்லாம் முதல் அமைச்சரிடம் எடுத்துச் சொல்லி வரும் கல்வி ஆண்டில் புதுத்துறைகளை உருவாக்குவது வேலைவாய்ப்புகளை ஊக்கப்படுத்துவது வெளிநாட்டில் இருக்கக்கூடிய நிறுவனங்களோடு இணைந்து மாணவர்களுக்கு பயிற்சி தந்து வேலை தருவது முதலமைச்சருடைய நோக்கம் எண்ணம் எல்லாம் இந்தியாவில் இருக்கக்கூடிய பிற மாநிலங்களை தமிழ்நாடு ஒப்பிட்டு பார்க்காதீர்கள் உத்திர பிரதேசம் பீகார் என்று அகில இந்தியாவில் இருக்கின்ற உலக அளவில் இருக்கின்ற நாடுகளோடு ஒப்பிடுங்கள் என்று அறிவுரை வழங்கி உள்ளார்.

தமிழ்நாடு சீனாவை போல் ஜப்பானை போல் தைவானை போல் எட்டக்கூடிய சூழ்நிலையை உருவாக்க பெரு முயற்சி எடுத்து வருகிறோம் அதற்கான கல்வி திட்டம் உருவாக்கப்படும்.

கல்லூரியுடைய பாடத்திட்டங்கள் மாணவர்களுக்கு நலம் பெற வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் 2,000 கௌரவ விரிவுரையாளர்களை நியமித்துள்ளார். அடுத்து 750 பேருக்கு மேலாக கௌரவ விரிவுரையாளர்களை நியமிக்க இருக்கின்றோம். அதைத்தொடர்ந்து வரும் ஜூன் மாதத்திற்குள் நான்காயிரம் பணியிடங்கள் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டு நிரந்தர பேராசிரியர்களை உருவாக்கக்கூடிய பெரு முயற்சியையும் எடுக்க தமிழ்நாடு முதலமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

**கௌரவ விரிவுரையாளர்களுக்கு ஊக்கத் தொகை அதிகரிப்பு!**

கடந்த 10 ஆண்டுகளில் கௌரவ விரிவுரையாளர்களுக்கு அதிமுக ஊதியத் தொகை 10,000 ரூபாய் மட்டுமே கூடுதலாக கொடுத்தார்கள். குறிப்பாக பத்தாயிரம் வாங்கியவர்களுக்கு 20,000 ரூபாயாக உயர்த்தினர். ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்ற ஒன்றரை ஆண்டுகளுக்கு உள்ளாகவே 5,000 ரூபாயை அவர்களுக்கு உயர்த்தி வழங்கி உள்ளார். இதன் மூலம் அரசுக்கு பல பணச்சுமை கூடுதல் செலவு இருந்தாலும் கூட பேராசிரியர்கள் நலம் காப்பதில் அக்கறையுடன் இருக்கக்கூடிய முதல மைச்சர் தமிழ்நாடு முதலமைச்சர். பத்தாண்டுகளில் அதிமுக 10 ஆயிரம் ரூபாய் கொடுத்தது அதை ஒன்றரை ஆண்டுகளில் 5000 ரூபாயை விருத்தியுள்ளார் இதுவே பேராசி ரியர்கள் மீது முதலமைச்சர் காட்டுகின்ற அக்கறையில் அடையாளம் என்று பேட்டி அளித்தார்.

### உலகப் பெருவிழா பொங்கல் திருநாளை அவமதிக்கும் வகையில்

# 'யு.ஜி.சி. - நெட்' தேர்வை நடத்துவதா? உடனடியாக மாற்றம் செய்க!

## ஒன்றிய அரசுக்கு கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் கண்டன அறிக்கை!

சென்னை, டிச.21

'உலகப்பெருவிழா' பொங்கல் திருநாளை அவமதிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு வன்மையான கண்டனங்கள் என்றும், "யுஜிசி - நெட்" தேர்வு அட்டவணையில் மாற்றம் செய்க என்றும், கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி. எம்.பி.எழிலரசன், எம். எல்.ஏ., அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

ஒன்றிய பா.ஜ.க. அரசின் கீழ் இயக்கும் தேர்வு முகமை (NATIONAL TESTING AGENCY) அறிவித்துள்ள "யுஜிசி - நெட்" தேர்வு அட்டவணையில் தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழாவான பொங்கல் பண்டிகை விடுமுறை நாட்களைக் குறி வைத்து 2025, ஜனவரி 15 மற்றும் 16 ஆகிய தேதிகளில் 30 பாடங்களுக்கானத் தேர்வுகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது முற்றிலும் தமிழர்களின் பண்பாட்டையும் அவர்களின் உணர்வுகளையும் அவமதிக்கும் செயலாகும்.

ஒன்றிய பா.ஜ.க. அரசு சார்பில் நடத்தப்படும் பல்வேறு தேர்வுகள் பொங்கல் பண்டிகை விடுமுறை நாள்களில் அறிவிக்கப்படுவது தொடர் கதையாகியுள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு கூட பட்டயக் கணக்காளர் (Chartered Accountant) தேர்வு கூட பொங்கல் விடுமுறை நாட்களில் அறிவிக்கப்பட்டது. பிறகு கடும் எதிர்ப்பு கிளம்பிய நிலையில் அத்தேர்வு ஒத்திவைக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாகத்தான் இந்த அறிவிப்பையும் பார்க்க வேண்டியுள்ளது.

**தமிழர்களின் பெருவிழா!**

தமிழர்களின் ஒற்றுமைக்கும், கொண்டாட்டத்துக்கும் அனுகூலமாக விளங்கும் பெருவிழா பொங்கல். "நாம் காணும் பொங்கல் விழா, உலகெங்கிலும் பிறந்து மொழி பயின்று வாழும் மனித குலத்துக்கே பொதுவான விழா! ஆம்! பசிக்கின்ற நல் வயிறு படைத்துள்ள மனித இனம் முழுவதுக்கும் சொந்தமான உலகப்பெருவிழா!" என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் போற்றப்படும் உலகப் பெருவிழாவினை ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ச்சியாக அவமரியாதை செய்வதை இத்துடன் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

**தமிழ் நாடெங்கும் போராட்டம்!**

மேலும், அறிவிக்கப்பட்ட "யுஜிசி - நெட்" தேர்வு அட்டவணையை உடனடியாக மாற்றம் செய்ய வேண்டும். இல்லையெனில் திராவிட மாடல் முதல்வர், முதலமைச்சர் அவர்கள் மற்றும் துணை முதலமைச்சர், இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைகளைப் பெற்று திமுக மாணவர் அணி சார்பில் தமிழ்நாடெங்கும் போராட்டம் நடத்தப்படும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கே. சண்முகநாதன்

### டிசம்பர் 21 (2021)



இளமைப் பருவத்திலிருந்தே முத்தமிழறிஞர் கலைஞர்மீது மாறா அன்பு கொண்டு, அவர் மறையும் காலம்வரை அவர் 'நிழலாக' வாழ்ந்தவர். கழகம் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், மாற்றுக் கட்சி ஆட்சியாளர்கள் தன் மீது பழிவாங்கும் நடவடிக்கைக்கு உத்தரவிட்டாலும் கலைஞர் அவர்களின் அருகிலேயே இருந்தவர். குடும்பத்தாரைவிட அதிக நேரம் கலைஞர் அருகில் இருக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றவர்.

கலைஞரின் மனம் நினைப்பதை, உதடுகள் உச்சரிப்பதற்கு முன்பாகவே நிகழ்த்தி முடிப்பவர். கலைஞரின் மனக்குரலை – மனதின் எதிரொலியை எழுத்து வடிவத்தில் மொழிபெயர்க்கக் கூடியவராக இருந்தவர். "இந்தப் பிறவியே கலைஞருக்கானது" என்று சொல்லி, அரைநூற்றாண்டு காலம் கலைஞரின் உதவியாளராக இருந்ததோடு, அவரின் அன்புக்குரியவராகி, அவருக்குச் சுமைதாங்கியாக – இடிதாங்கியாக இருந்தவர்.

"நான் உறைந்து நிற்கிறேன். அவரின் அன்றலர்ந்த முகம் தவிர வேறெதுவும் என் மனதில் தோன்றவில்லை. உடன்பிறவா அண்ணனே.. உடன்பிறப்புகளின் தலைவரிடம் சென்றுவிட்டவரே! எங்களில் நீங்கள் என்றென்றும் வாழ்கிறீர்கள். எங்கள் 'இயக்க'த்தில் நீங்கள் குருதியோட்டமாகக் கலந்திருக்கிறீர்கள்." என்று கழகத் தலைவர் அவர்கள் அவரது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**